உணவு டெலிவரி ஊழியர்களுக்கு ஓய்வறை

இதுதான் ‘திராவிட மாடல்’ அரசு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன்.12-

உணவு டெலிவரி செய்யும் ஊழியர்களுக்கும் ஓய்வறை அமைத்து துன்பத்தில் உழல்வோருக்கும் ஆதரவுக் கரமாக இருப்பது தான் திராவிட மாடல் அரசு என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள் ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை delivery செய்யும் gig ஊழியர்களுக்குக் கழிப்பறை, AC, charging point, வாகன நிறுத்தம் உள்ளிட்ட வசதிகளுடன் Scandinavian வடிவமைப்பில் இணையத் தொழிலாளர் கூடம் (lounge) முதற் கட்டமாக, பெண் பணியாளர்கள் அதிகம் பணியாற்றும் சென்னை அண்ணாநகரில் தொடங்கப்பட்டுள்ளது.

இந்தியா எதிர்காலத்தில் பின்பற்றும் திட்டங்களை இன்றே நிறைவேற்றுவதுதான் தமிழ்நாடு style!

வெயிலில் வாடுபவருக்கு நிழல் மரமாக,

தாகத்தில் தவிப்பவருக்கு ஒருகுவளைத் தண்ணீராக,

துன்பத்தில் உழல்வோருக்கு ஆதரவுக்கரமாக இருப்பதுதான் Dravidian Model!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் - மாபெரும் கருத்தரங்கம்!

ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அறிவிப்பு!

சென்னை, ஜூன்.12-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாபெரும் கருத்தரங்க கூட்டம் தருமபுரி மேற்கு மாவட்டம், ஆரூர் என்.என். மஹாலில் (1506 2025) அன்று காலை 10.00 மணிக்கு ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., தலைமையிலும், ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் மருதூர் ஏ.இராமலிங்கம், ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில துணை செயலாளர்கள் பி.துரைசாமி, கொடநாடு மு.பொன்தோஸ், மூ.பரமானந்தம், எஸ்.மாரியப்பன் கென்னடி, சி.தசரதன் மற்றும் தகடூர் கொ.ரமேஷ் ஆகியோர் முன்னிலையிலும் நடைப்பெறுகிறது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் மற்றும் கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் கருத்தரங்கை துவக்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கருத்தரங்கு கூட்டத்தில் கழக மாணவர் அணி செயலாளர் இரா.இராஜிவ் காந்தி, ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர்கள் வி.பி.இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி மற்றும் ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் அரூர் சா.இராஜேந்திரன் ஆகியோர் கருத்துரையாற்றுகிறார்கள்.

ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரும், ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவருமான மா.மதிவேந்தன், தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் ஆ.மணி எம்.பி., கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன், எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ., திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜ், எம்.எல்.ஏ., மற்றும் ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கருத்தரங்கு கூட்டத்தில் மண்டல அளவிலான தருமபுரி மேற்கு, கிழக்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு, திருப்பத்தூர், நாமக்கல் கிழக்கு, மேற்கு, ஈரோடு வடக்கு, தெற்கு, மத்திய ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட, மாநகர தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
66	மே.பொ. / கொ&நி / வ.செ.அமிநி - 1	Muff coupling suitable for CWPs
67	மே.பொ. / கொ&நி / வ.செ.அமிநி - 1	Clinker grinder Complete Assembly
68	மே.பொ. / கொ&நி / வ.செ.அமிநி - 1	Discharge assembly for pulverised coal to classifier consisting of MPO plate venturi collar ventur
69	மே.பொ. / கொ&நி / வ.செ.அமிநி - 1	Inner cone with inside ceramic lining for HP803 bowl mills in Unit- I
70	மே.பொ. / கொ&நி / வ.செ.அமிநி - 1	Discharge assembly for pulverised coal to classifier consisting of MPO plate venturi collar ventur
72	மே.பொ. / கொ&நி / வ.செ.அமிநி - 1	Clean out conveyor complete assembly for 36 Gravimetric feeder of HP803
46	மே.பொ. / கொ&நி / வ.செ.அமிநி - 2	Procurement of Cap Nuts required for Main turbine IV CV casing
47	மே.பொ. / கொ&நி / வ.செ.அமிநி - 2	Supply and Erection of SS pipes in ACW system
51	மே.பொ. / கொ&நி / வ.செ.அமிநி - 2	Procurement of 200NB seamless pipes and bends for Compressor Cooling Water

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/2977/ஒப்பந்தப்புள்ளி/2025

விழுப்புரம் மத்திய மாவட்டம்

கோலியனூர் மத்திய ஒன்றிய பொருளாளர் சி.காமராஜ் மறைவு!

விழுப்புரம், ஜூன்.12-

விழுப்புரம் மத்திய மாவட்டம், கோலியனூர் மத்திய ஒன்றிய கழகப் பொருளாளர் சி.காமராஜ் (வயது 66) மாரடைப்பால் 9.6.2025 அன்று மறைந்தார். காமராஜ் அவர்களின் மனைவி பரிமளா, மகன் பூங்குன்றன் ஆவர்.

காமராஜ் அவர்கள் கடந்த 35 ஆண்டுகளாக கழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் சிறப்பாக கழக பணியாற்றியவர். 20 ஆண்டு களாக கிளைச் செயலாளராகவும், கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக ஒன்றிய பொருளாளராகவும், பல்வேறு கழக பணிகளை செவ்வனே ஆற்றியவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார், துணை முதலமைச்சர் இளந்தலைவர் ஆகியோர் மீது தீராத பற்று கொண்டு கழக பணியாற்றியவர்.

அன்னாரது உடலுக்கு விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் அஞ்சலி செலுத்தி, பிரிந்து வாடும் குடும்பத்தி னருக்கு ஆறுதல் கூறினார்.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா, எம்.பி.பங்கேற்பு!

சென்னை வடகிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாதவரம், திருவொற்றியூர் தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை வடகிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாதவரம். திருவொற்றியூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறும்.

வ.எண்	நாள்	நேரம்	சட்டமன்ற தொகுதி	இடம்
1	13.06.2025 வெள்ளிக்கிழமை	09.30	மாதவரம்	G.P.L பேலஸ் லட்சுமிபுரம்
2	13.06.2025 வெள்ளிக்கிழமை	10.30	திருவொற்றியூர்	TKP திருமண மண்டபம்

மேற்கண்ட கலந்துரையாடல் கூட்டத்திற்கு சென்னை வடகிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மாதவரம் தொகுதி பார்வையாளர் கே.அருண், திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக, வட்ட கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் என அனைவரும் அவரவர் உள்ளடங்கிய சட்டமன்ற தொகுதியின் கலந்துரையாடல் கூட்டத்திற்கு (மேலே குறிப்பிட்டுள்ள நிர்வாகிகள் மட்டும்) தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.
செயலாளர்
சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

மாதவரம் வடக்கு பகுதி, 19 ஆவது வட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட அளவிலான மாபெரும் கிரிக்கெட் போட்டி 19ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. ஏ.கதிரவன், எம்.சந்தோஷ், ஏ. தனசேகர் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போட்டியில், முதல் பரிசு பெற்ற ஏகே செலக்ட் சிந்தாதிரிப்பேட்டை அணிக்கு 20000 ரொக்கம் மற்றும் பரிசுக்கோப்பையும், இரண்டாம் பரிசு பெற்ற மஞ்சம்பாக்கம் அணிகளுக்கு 15000 ரொக்கம் மற்றும் பரிசுக்கோப்பையும் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, எஸ். உதயகுமார், திருமலை கார்த்திக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

ஆண்டிப்பட்டி தி.மு.க. முன்னாள் ஒன்றிய கழக செயலாளர்

எஸ்.வைகை சேகர் தாயார் ராஜாங்கம் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

ஆண்டிப்பட்டி, ஜூன் 12-

ஆண்டிப்பட்டி தி.மு.க. முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வைகை சேகர் தாயார் ராஜாங்கம் அவர்கள் 10.06.2025-செவ்வாய் அன்று மதியம் 1.30 மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அம்மையாரின் உடல் நேற்று (11.06.2025) மதியம் 2 மணியளவில் வைகைப்புத் தூரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இறுதி ஊர்வலத்திலும் கழகத்தினர் பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

கீழடி: ஆதாரங்களை சரியாகத் தந்தும் தடுத்து நிறுத்துவதன் பின்னணி என்ன?

ஒன்றிய ஆர்.எஸ்.எஸ். அரசின் போக்கைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 12-

தமிழர்களின் தொன்மையைப் பறைசாற்றும் கீழடி ஆய்வைத் தடுத்து நிறுத்தும் ஒன்றிய பிஜேபி - ஆர்.எஸ்.எஸ்ஸின் போக்கைக் கண்டித்து சென்னையில் வரும் 18ஆம் தேதி திராவிடர் கழகம் நடத்தும் ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்துக் கட்சியினரும் திரண்டு வருமாறு அழைக்கும் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்களின் அறிக்கை வருமாறு:-

‘கீழடி அகழாய்வு அறிக்கையை அங்கீகரிக்க முடியாது’ என்று ஒன்றிய பா.ஜ.க. அரசின் கலாச்சாரத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார். இவர்களுக்கு தமிழ்நாட்டு வாக்குகள் மட்டும் தேவையாம்!

கீழடி ஆய்வு முடிவுகளை அறிவிக்க மறுப்பது ஒன்றிய பிஜேபி அரசின் மனநிலையைக் காட்டுகிறது!

“தமிழ்நாட்டில் நடக்கும் கீழடி அகழ்வாராய்ச்சி முடிவுகள், அறிவியல் பூர்வமாக, தொழில்நுட்ப ரீதியில் இன்னும் நிரூபிக்கப்படவில்லை. அங்கீகாரம் வழங்குவதற்கு முன், அதிக நடைமுறைகள் உள்ளன. அதற்கு இன்னும் நிறைய சான்றுகள் தேவைப்படுகின்றன. அவ்வாறு, அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப் பட்டதும் அங்கீகாரம் வழங்கப்படும்” என்று அவர் நேற்று (10.6.2025) செய்தியாளர்கள் மத்தியில் தமிழ்நாட்டின் இந்நாள், மேனாள் பா.ஜ.க. தலைவர்களை அருகில் வைத்துக் கொண்டு பேட்டி அளித்துள்ளார். இது தான் பா.ஜ.க.வின் உண்மையான மனநிலை!

கீழடி அகழ்வாராய்ச்சி முடிவுகளுக்கு இன்னும் பல அறிவியல் பூர்வமான சான்றுகள் அவசியம் என்று இந்த விசயத்தில் பேசும் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வும், ஒன்றிய அரசும், இதுவரை ஆதாரப்பூர்வமாக எதையாவது வரலாற்றுப்படி கோரியிருக்கிறார்களா? இராமாயண, மகாபாரதக் கதைகளை நிறுவுவதற்குப் பல இடங்களில் அகழாய்வு செய்கிறோம் என்கிறார்களே, அவ்வப்போது சில கதைகளை ‘அனுமானங்கள்’ என்ற பெயரிலும் வெளியிடுகிறார்களே, உருப்படியான ஆதாரங்கள் எவற்றை யாவது தந்திருக்கின்றனரா? ஆய்வு முடிவுகள் வெளிவந்திருக்கின்றனவா? இன்னமும் சரஸ்வதி நதி பூமிக்கடியில் ஓடிக் கொண்டிருக்கிறது என்கிறார்களே, அதற்கு மாறாகத் தானே இந்தியப் புவியியல் ஆய்வு முடிவுகள் வெளிவருகின்றன. ஆனாலும், சிந்து வெளி நாகரிகத்துக்குச் சரஸ்வதி பெயரைச் சூட்டத் துடியாய்த் துடிக்கிறார்களே, இவற்றுக்கெல்லாம் எள்முக்கு முனையளவு ஆதாரங்கள் உள்ளன என்று காட்ட முடியுமா?

என்ன ஆதாரம் இல்லை கீழடி ஆய்வில்?

கீழடி அகழாய்வின் முதல் இரு கட்டங்கள் முடிந்து, அவற்றின் ஆய்வு முடிவுகளை அறிவியல் சான்று களின் அடிப்படையில் முன்வைத்து, அறிக்கையை ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா அனுப்பிவைத்து இரண்டாண்டுகளுக்குப் பிறகும், அதை ஏற்க மனமில்லாமல், எப்படியாவது எதைச் சொல்லியாவது கீழடி அகழாய்வைப் புறந்தள்ளிவிட வேண்டும் என்னும் ஒற்றை நோக்கம் தானே தொடர்ந்து ஒன்றிய அரசிடமிருந்து வெளிப்படுகிறது.

தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை அமைச்சரும், நிதி அமைச்சருமான தங்கம் தென்னரசு அவர்கள் “5,350 ஆண்டுகள் பழமையானவர்கள். தொழில்நுட்பம் கொண்டவர்கள். மூத்த நாகரிகம் படைத்த முதுமக்கள் தமிழர்கள் என்றெல்லாம் உலக அறிவியல் ஆய்வுகள் ஒப்புக் கொண்டாலும், ஒரே நாட்டில் இருக்கும் ஒன்றிய அரசு ஒப்புக்கொள்வதில் ஏன் இத்தனை தயக்கம்?” என்று சரியாகக் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

கண்டெடுக்கப்பட்ட கரிமப் பொருள்களிலிருந்து, அதன் காலத்தைக் கணக்கிடுவதற்காக அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள பீட்டா ஆய்வகம் உள்பட பல ஆய்வகங்களுக்கும் அனுப்பப்பட்டு, அவற்றின் முடிவுகள் வந்திருக்கின்றன. வேறு என்ன ஆதாரம் வேண்டுமென்கிறார்கள்?

சமஸ்கிருதத்திற்கு இப்படிப்பட்ட ஆதாரங்களைக் காட்ட முடியுமா?

அக் கரிமப் பொருள்கள் கிடைக்கும் ஆழத்தைக் கணக்கிட்டு, அதையொட்டி கிடைக்கும் பானையோடுகளில் பதிக்கப்பட்டுள்ள எழுத்துகளின் வயதையும் கணக்கிட முடியும். அப்படி கணக்கிட்டால், கடந்த நூற்றாண்டில் அசோகர் பிராமி எழுத்துகள் தான் மூத்த எழுத்துகளாக இதுவரை இருந்தன. இவை அவற்றுக்கும் முந்தைய தமிழி எழுத்துகள் என்ற உண்மையை ஏற்க வேண்டியிருக்கும். அதனால் தானே ஏற்க மறுக்கிறார்கள். சமஸ்கிருதத்திற்கு இப்படி ஒரு சான்றை அவர்களால் காட்ட முடியவில்லையே! சமஸ்கிருதம் இந்திய மொழிகளின் தாய் என்று பல காலமாகப் பேசி வந்த புரட்டுகள் பொய்யென்றாகி விடுமே! திராவிட மொழியாகிய தமிழ் மொழியின் தொன்மை; அறிவியல்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டால் என்னாவது என்ற பதற்றம் தானே கீழடி அகழாய்வை முடக்கப் பார்த்தது தொடங்கி, இன்று அந்த ஆய்வு அறிக்கையை ஏற்க முடியாது என்று சொல்லும் வரைக்கும் வந்திருக்கிறது. அனைத்துக்கும் அடிநாதமாக இருப்பது தமிழ் - திராவிட வெறுப்பும், ஆரியப் பெருமிதமும் தானே! ஆனால், தமிழின் பெருமையை நாங்கள் பேசுகிறோம் என்று வெற்றுத் தம்பட்டம் அடிக்கிறது பா.ஜ.க.

இந்தியக் கலாச்சாரத் துறை அமைச்சருக்கு, தொன்மை மிக்க ஒரு மொழியினை, அதன் வரலாற்றினை, அதை நிறுவும் அறிவியல் சான்றினை ஏற்க மனமில்லையே! இது தானே பா.ஜ.க. அரசின் நிலைப்பாடு!

இராம ஜென்மப் பூமிக்கு முறையான ஆதாரங்கள் காட்டப்பட்டனவா?

இன்னும் போதிய அறிவியல் ஆதாரங்கள் தேவை என வேதான் அங்கீகரிக்க முடிய வில்லை என்ற ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங் அவர்கள் கூற்று, ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வின் முன்கூட்டியே திட்டமிட்ட முடிவு தான். அம் முடிவுக்கேற்ப, ஏதோ ஒரு பொருந்தாத சாக்குப் போக்கு, இது நியாயமானதல்ல!

கீழடியை ஏற்றால், திராவிட நாகரிகம் வேதகால நாகரிகம் என்று இவர்கள் சொல்லி வந்த காலத்திற்கும் முந்தையது என்ற உண்மையை ஒப்புக் கொள்ள நேருமே என்ற காரணத்தால் தங்களது கருத்தினை மறைமுகமாக நிலைநிறுத்தவே மேலும் அறிவியல் சான்றுகள் தேவைப்படுகின்றன என்கிறார் ஒன்றிய அமைச்சர்.

அவரையும், அவருக்கு உத்தரவிடும் ஆர்.எஸ்.எஸ். வகையறாக்களையும் கேட்கிறோம்.

பிரச்சினையை ஏற்படுத்திய அயோத்தி இராமன் கோயில் இடம்பற்றி, ஆதாரங்கள் சான்றாவணங்கள் அடிப்படையில் உச்சநீதிமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. மற்ற ஆதரவு அமைப்புகள் வாதங்களை வைத்ததுண்டா?

இராம ஜென்ம பூமி கட்சி அமைப்பாளர், “இராமன் பிறந்த பூமி என்பது எங்கள் நம்பிக்கை” என்று தானே வாதிட்டார்.

ஒத்தக் கருத்துள்ளோர் ஓரணியில் திரளட்டும்!

உச்சநீதிமன்றமும் மற்ற தீர்ப்புகளைப்போல் அல்லாது, அப்போது அளித்த தீர்ப்பில், அது மக்களின் நம்பிக்கை - கடவுளைக் கேட்டு தீர்ப்பு எழுதியதாகக் கூறப்பட்ட விசித்திரம் நடந்ததே! அதை என்ன சொல்ல! பல ஆயிரக்கணக்கான பேருக்கு வேலை வாய்ப்பு, பொருளாதார வளம் பெருகியிருக்க வேண்டிய சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை, ‘இராமர் பாலம்’ என்று இல்லாத சில மணற்பாறைகளைக் காட்டி பிரச்சினை ஆன போது, நாடாளுமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் அதற்குரிய ஆதாரம் கிடைக்கவில்லை என்று ஒன்றிய அரசாலும் - ஆர்.எஸ்.எஸ். அரசாலும் ஒப்புக் கொள்ளப் பட்டது. ரூ.2,200 கோடி திட்டம் பயனற்று போனதே!

ஆயிரக்கணக்கானோர்க்குக் கிடைக்கவிருந்த வேலை வாய்ப்புப் பறிக்கப்பட்டதே! தென் மாவட்டங்களின் பொருளாதார வளமும் மண் மூடிப் புதைக்கப்பட்டதே!

இவர்கள் சொன்ன எதற்கும் நிபுணர் ஆய்வுகள், போதிய சான்றுகள் தங்களிடம் இல்லாத நிலையில், ஆதாரப் பூர்வமாக உள்ள கீழடி நாகரிகத்தைக் கட்டுப்பாடாக இருட்டடிப்பு செய்யும் வேலையில் இறங்கியுள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளுக்காக தமிழர்களின் தொன்மையைப் பலி கொடுக்க முடியுமா?

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளுக்காக, கீழடி அகழாய்வை, தமிழ்நாட்டின் தொன்மையை நிறுவும் பல்வேறு அகழாய்வுகளைப் பலி கொடுக்க முடியாது. ஆதாரப் பூர்வமான வரலாற்றுச் செய்திகளை மறைத்து, இந்திய வரலாற்றினைப் பொய்யான தகவல்கள், அனுமானங்கள், இதிகாசங்களின் அடிப்படையில் மாற்றி எழுத முயற்சிக்கும் ஒன்றிய அரசு, கீழடி அகழாய்வு முடிவை அங்கீகரிக்க மறுப்பதையும் ஏற்க முடியாது. இது ஒரு பண்பாட்டு அழிப்பு என்பதால் தமிழ் நாட்டு மக்களும், ஆய்வாளர்களும் ஒன்றுபட்டுத் திரண்டு மக்கள் மன்றத்தின் துணை கொண்டு குரல் கொடுப்பது இன்றியமையாததாகும்.

ஒத்தக் கருத்துள்ளவர்கள் அனைவரும் கலந்தாலோசித்து தக்க அழுத்தம் தரும் வகையில் ஒரு மாபெரும் அறப்போராட் டத் திட்டத்தை அறிவிப்பது அவசரம் - அவசியம்.

இவ் விவகாரத்தில் தமிழர்களின் ஒற்றுமையைக் காட்டும்வகையில், ஒருமித்த குரல் எழுப்ப வேண்டியது அவசியமாகும். தமிழ்நாட்டின் வரலாற்று, பண்பாட்டுச் சிறப்புகளை சிறுமைப்படுத்த முயற்சிப்பதையும், காலத்தால் மூத்த தமிழி எழுத்து வடிவத்திற்குக் கிடைத்துள்ள சான்றுகளை மறுப்பதையும் கண்டித்து, திராவிடர் கழகத்தின் சார்பில், 18.6.2025 புதன் கிழமை அன்று சென்னையில் எனது தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். (2017லும் ஆர்ப்பாட்டத்தை திராவிடர் கழகம் நடத்தியதுண்டு) ஒத்த கருத்துள்ள அமைப்புகளின் தலைவர்களுக்கு திராவிடர் கழகத்தின் சார்பில் கனிவுடன் அழைப்பு விடுக்கின்றோம். ஒன்றிய அரசின் சமஸ்கிருதச் சார்பு நிலைக்கும், தமிழ் காழ்ப்பு நிலைப்பாட்டுக்கும் கடும் கண்டனங்களை எழுப்ப வேண்டும். அனைத்துக் கட்சிகளும், கட்சிகளுக்கு அப்பாற்பட்ட அமைப்புகளும் போராட முன்வர வேண்டும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
வடக்கு வட்டாரம்

வ. அ. இ. பொ. து. ந. க. எண். 84/208/2025

மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

கோப்பு எண்.	பணியின் விவரம்	முன் வைப்பு தொகை
பி4/208/2025	பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் IV லாரி நிலையத்தில் 02 எண்ணிக்கையிலான (Hydraulic Excavator with floating facility) மிதக்கும் வசதியுடன் கூடிய இயந்திரங்களை கால்வாய் பராமரிப்பு பணிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் 270 நாட்களுக்கு பணியமர்த்துதல்.	ரூ. 46,000/-

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **26.06.2025** மாலை **03.00** மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **27.06.2025** மாலை **03.15** மணி

மேலும் விபரங்களுக்கு : **http://tntenders.gov.in**

செ.ம.தொ.இ / 2989 / ஒப்பந்தப்புள்ளி / 2025

மேற்பார்வை பொறியாளர் (வடக்கு)

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே. வாசுதேவன்

ஜூன் 12 (2020)

தனது இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும், அண்ணாகிராம ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, ஒன்றிய பொருளாளர் என கழகத்தில் பொறுப்புகள் வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவர், ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்க தலைவர் அருங்குனம் கூட்டுறவு சங்க இயக்குநர் என பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.